
மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை


# சூழல் சுடர்

வைகாசி 1995 ❁ "மன்று", 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ❁ 29



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

நித்திலமும் போற்றும்
மனித குலத்தோனே
நீ கக்குகின்ற புகையால்
புதைப்பதென்ன நின் உடலை
அது மட்டுமல்ல மனிதா - உன்
பூவுலகும் இதனால்
மாசுபல கண்டு
மாறுதய்யா இயற்கை.



ஆசிரியர் குழு

திரு. கா. நடராஜா — செல்வி கு. ஜசிந்தா
திருமதி வி. இராமச்சந்திரா — திருமதி யோ. புவனேந்திரன்
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர் — செல்வி க. லீலா

## உள்ளடக்கம்

இயற்கை முறை விவசாயிகளின் குறிப்புகள் 2
கண்டு பிடியுங்கள், பரிசு உங்களுக்கே 2
போட்டி எண் 9
இயற்கை இன்று அழிகிறது 3
திருமதி யோ. புவனேந்திரன்
பூமித் தினத்தைப் புனிதமாக்குவோம் 3
செல்வி த. கோகிலா
கூட்டுப்பசளை தயாரிக்கும் முறை 4
திரு. மு. கலைமோகன்
இலங்கையிற் காடழிப்பும் அதன் பாதிப்பும் 5
திரு. கு. வெற்றிவடிவேல்
வளங்கள் சில சிந்தனைகள் 6
திரு. ஆ. கதிரமலைநாதன்
கண்டு பிடியுங்கள் பரிசு உங்களுக்கே
மாசி மாத கேள்விகளுக்கான விடைகள் 7
இம்மாத செய்திச் சுடர் 8

## மாசி மாதப் போட்டி முடிவுகள்

1ம் இடம் - செல்வன் பொ. கிருஷ்ணராசா
ஹஸ்,
மட்/ஏறாவூர், தமிழ் ம. வி.
செங்கலடி

2ம் இடம் - செல்வன் அ. அனோந்திரன்
ஆண்டு 11
மட்/ புதுக்குடியிருப்பு
கண்ணகி வித்தியாலயம்
ஆரையம்பதி.

3ம் இடம் - செல்வி பொ; அகிலாதேவி
இல. 46, இராசதுரைக்
கிராமம், ஆரைப்பற்றை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை முறை விவசாயிகளின் குறிப்புக்கள்

இயற்கை முறை விவசாயிகளுக்கான நான்கு கூட்டங்கள், மன்றுவில் நடைபெற்றது. அக்கூட்டங்களில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

- வைக்கோல் போட்டு 3 முறை வீலினால் உழுது விதைத்த பூமிக்கும், சாதாரணமாக புல் செதுக்கி 6 முறை உழுது விதைத்த பூமிக்கும் நீர் கிடைக்கப் பிந்தியதால் ஏற்பட்ட வித்தியாசம் – வைக்கோல் போட்டு உழுத பூமி காயவில்லை, மற்ற பூமி காய்ந்து வெடித்தது.
- நெல் முளை கட்டும்போது காபோபியூரான் போட்டு கழுவி விதைத்த வயலில் சந்துக்குத்தி நோய் ஏற்பட்டாலும், காபோபியூரான் போட்டுக் கழுவாமல் விதைத்த வயலில் கூடுதலான சந்துக்குத்தி நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.
- நீர்வாழை வயலை மூடியிருந்தபோது எம். சி. பீ. ஏ. 40 அடித்தபோது முற்றாக அழிந்தது.
- சின்ன இனப் புடோல் கொடிக்கு மீன் கழுவிய நீர் ஊற்றினால் நன்றாகக் காய்க்கும்.
- செயற்கைப் பசளை பாவித்துப் பயிர் செய்த நிலத்தில் புல் பூண்டுகள் முளைக்கவில்லை. பயிர் செய்யாமல் விட்டு சிறிது காலத்தின் பின் புல் பூண்டுகள் முளைத்ததும், மண்புழு போன்றவை மண்ணில் உருவாகியும் காணப்பட்டன.
- தேக்கங் கன்றுகளின் வளர்ச்சி குறைந்த வேளை அமோனியம் சல்பேற்று போடப்பட்டது. இதனால் கன்றுகளின் வளர்ச்சி கூடுதலாக இருந்தது. ஆனால், வேர் வளர்ச்சி இருக்கவில்லை.
- கத்தரிக்காய்களில் புழு குத்தியபோது எந்த விதமான மருந்து பாவித்தும் கட்டுப்படவில்லை. காபோபியூரான், நீலசோப், செலகிராம், தமறோன் போட்டு அடித்தபோது புழுக்கள் இறந்தது. காய்கள் நன்றாக இருந்தன. ஆனால், மரங்கள் அப்படியே விறைத்து நின்றன.
- சாம்பல், வேப்பம் கொத்து போட்ட மரக்கறித் தோட்டத்தில் பயிர்களுக்கோ அல்லது காய்களுக்கோ நோய்த்தாக்கம் இல்லை.
- நிலத்தில் நீர் நிற்பதை உறுதிப்படுத்த எரிந்த உமி பரவப்பட்டுள்ளது. களைகள் அவசியமின்றிப் பிடுங்கப்படுவதில்லை.
- வாழை மரங்களுக்கு அடியில், இலைகளின் குப்பைகள் போடப்படுகின்றன. இதனால், மண்ணில் இருந்து நீர் ஆவியாதல் தடைப்படுகின்றது. அத்துடன் மண்ணில் நுண்ணங்கிகளின் வளர்ச்சிப் பெருக்கம் அதிகமாக உள்ளது.

## பயிர்ப் பாதுகாப்பு முறை

- வேப்பிலை, கிளுவை இலை சொரிதல், சவர்க்கார நீருடன் மண்ணெண்ணை சேர்த்துத் தெளித்தல் செவ்வந்திப்பூ மரங்களைக் கூடுதலாக வளர்த்தல்.
- வேம்பு, மாட்டுச் சிறுநீர், சாம்பல், சவர்க்காரம், நீறு போன்றவை பயிர்களுக்குப் பாவித்தல்.

---

**போட்டி எண் 09** **முடிவுத் திகதி 30-07-95**

### கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே

1. முதன்முதல் (1822 — 1895 வரையான காலப்பகுதி) வெறிநாய்க்கடிக்கான மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?
2. போலியோவிற்கு எதிர்ப்புச்சக்தி மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
3. இலங்கையில் ஏப்பிரல் தொடக்கம் ஆகஸ்ட் வரையும் மழை கிடைப்பது எப்பருவக் காற்றினால்?
4. ஒரு தாய் வாழையுடன் இருக்கக் கூடிய குட்டிகளின் எண்ணிக்கை எத்தனை?
5. சமதரையில் மரநடுகையை மேற்கொள்ளும் திசைகள் எவை?
6. பூனை வணங்கி என அழைக்கப்படும் பூண்டு எது?
7. குரங்கின் கர்ப்ப வேதனையைப் போக்க உதவும் பூண்டு எது?
8. மட்டக்களப்பு மாநகர சபையினர் கழிவுகளைக் கொட்டி எரித்ததால் கண்டல் தாவரங்கள் அண்மையில் எரிந்தன. அவ்விடத்தின் பெயரென்ன?
9. கிடைக்கும் நீரைத் தனக்கேற்ற விதத்தில் மாற்றிப் பயன்பெறும் கண்டல் தாவரம் எது?
10. பன்றி தன் காயத்தை ஆற்றப் பயன்படுத்தும் மூலிகை எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## இயற்கை இன்று அழிகிறது

திருமதி யோ. புவனேந்திரன், மன்று

இறைவன் நினைத்தான் – இவ்
உலகு தனைப் படைக்க
படைத்த பின்பு நினைத்
தான் - நல்
மனிதர் தன்னை ஆக்க
மானுடனும் நினைத்தான் –இவ்
இயற்கை தன்னை ஆள
ஏன் மனிதன் நினைத்தான்
- இன்று
உலகுதனை மாற்ற?

விவசாயம் செய்து - பெரும்
விளை பயிரைப் பெற்று
வீண் முயற்சி விட்டு - நல்
உணர்வு பல கொண்டு
மற்றவர்க்காய் வாழ்ந்து
இயற்கையுடன் இணைந்து
இன்பம் பல கண்டான் – இன்று
அதை ஏனோ கொன்றான்!

கட்டவிழ்ந்த பூவும்
கள்ளமின்றிச் சிரிக்க
ஓடிவரும் நதியும் கடலில்
ஒற்றுமையாய் சங் கமிக்க
கானம்பாடும் பறவைகள்
எங்கும்
பாடித் திரியும் அழகுகள்
இன்று பாரதிலே மறைந்ததேன்
பாழாய் உலகும் பதறுதேன்?

வீறு கொண்ட மனங்களே
நீங்கள் பெற்றதென்ன
பணங்களோ
வாழும் உலகு மாறுதே - எம்
மனங்களெல்லாம் மாளுதே
பூமியெங்கும் வெடித்தது
பூமியதிர்ச்சியென்று பேரெடுத்
தது
ஓடும் நதிகள் வறண்டது
நல் உயிர்களெல்லாம் இறந்தது!

குப்பை கூளம் பெருகுது
- எங்கும்
தீய நாற்றம் வீசுது
சுற்றம் சூழல் நுகருது – இக்
கெட்ட காற்றைப் பெறுகுது
இந்த வாயு புகுந்ததால்
உடல் கெட்டு நோயும்
தோன்றுது
இதைத் தடுக்க நீங்கள்
நினைத்திட்டால்
புதைக்க வேண்டும் குப்பை
களை

புவியைக் காக்கும் படை
யொன்று
கூரைபோன்று அமைந்தது
- அதை
ஓசோன் என்று அழைப்பார்கள்
ஊதாக் கதிர்களை வடிகட்டும்
இதுவும் இன்று அழிந்தது
அதன் பகுதி தடிப்பு குறைந்தது
கடும் வெப்பம் எங்கும் நிறை
வதால்
இனி உயிர்கள் கூட அழியுமாம்

குப்பை கூளம் எரிப்பதும்
தொழிற்சாலை புகைகள்
விடுவதும்
ஓடும் வாகனங்கள் தருவதும்
விறகு அடுப்பு விடுவதும்
காபன் ஈரு ஒட்சைட்டை
என்று நாமும் அறிந்தோமே
வளியில் இதுவும் சேர்ந்ததால்
இன்று அனலாய் பூமி எரியுதே

சற்று நாமும் சிந்திப்போம்
எம் செயலை நாமும் நிந்திப்
போம்
நித்தம் போற்றும் உலகினை
நிஜமாய்க் காக்க நினைத்திடு
வோம்

பச்சை வீட்டுத் தாக்கத்தை
ஓசோன் படல ஒட்டையை
வறண்ட பூமி காத்திட
வருவாய் தோழா எம்முடன்

---

## பூமித்தினத்தை புனிதமாக்குவோம்

ஆக்கம்: செல்வி த. கோகிலா, ஆண்டு 9, மட்/முனைத்தீவு சக்தி வித்தியாலயம்.

எல்லோர்க்கும் இப்பூமி வாழிடம் இன்று
எல்லோர்க்கும் இப்பூமி மரணவிடம்
வல்லோராம்...என்று மார் தட்டும் மனிதன்
மரணவழி சமைத்துவிட்டான் இனி
வாழ்வதெங்கே?
காடுகளை அழித்துவிட்டான் களனி கண்டான்...
கண்டபடி கட்டடங்கள்...களியுங் கொண்டான்
மட்போர்வை அகற்றிவிட்டான் மடமைதனை
எண்ணவில்லை
இப்புவியில் சமநிலையைத் தகர்த்து விட்டான்
விஞ்ஞானம் கண்டான் விந்தைகளைச் செய்தான்
அஞ்சாது நின்றான் அழிவிற்கே வழிகண்டான்
வீதிகளில் நஞ்சு வீடுகளில் நஞ்சு
அண்டவெளியில் நஞ்சு அருந்தும் நீரிலும் நஞ்சு...
சூழலை மாற்றினான். சூழ்ந்தது துன்பம்..
சூழலைக் காக்கத் துடிக்கின்றான் இன்று
சுடலை ஞானம் சுருதியை மீட்டுமா?
மண்ணைக் காக்க மறந்த மனிதன்

விண்ணை அளக்க முனைந்தும் விட்டான்
கண்ணில் தானே மண்ணும் கொண்டான்
ஓசோன் படையிலும் ஓட்டை கண்டான்
ஊதாக் கதிரினால் நாசமுளது என்றான்
சமநிலை பேணும் தாவரப் போர்வையை ..
வேருடன் மனிதன் விழுங்கியே விட்டதால்
சூழவே நிற்கிறது காபனீரொட்சைட்டு
துருவம் இரண்டின் பனிப்படலங்கள்
உடைந்தது இதனால் உருகவே செய்யும்
என்று மனிதன் இன்று கண்டான்
மண்ணைக் காக்க மறந்த மனிதன்...
மடமையைக் கண்டான் மரணம் கண்டான்
மண்ணைக் காக்கவும் மனவுறுதி கொண்டான்
பூமித்தினத்தைப் புனிதமாய்க் கொண்டான்
புறப்பட்டு வாரீர் புறப்பட்டு வாரீர்
பூமித்தாயைப் புனிதமாய்ப் பேணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## கூட்டுப் பசளை தயாரிக்கும் முறை

மு. கலைமோகன் சித்தாண்டி.

இதற்கு வைக்கோல், ஒட்டுத்தாள், களை, புல், பசுந்தாள், வீட்டுக்குப்பை கூழம் முதலானவற்றைப் பாவிக்கலாம். இவை பெரிதாக இருப்பின் வெட்டித் தூளாக்கிக் கொள்ளவேண்டும்.

இம் முறையானது கவாட்டு, உவாட்டு என்னும் அறிஞர்களின் ஆய்வின்படி கண்டுபிடிக்கப்பட்டதால் இதனை 'இந்தூர்முறை' என்று கூறுவர். பெரும்பாலும் கைக்கொள்ளப்படும் முறை இந்தூர் முறையே ஆகும்.

கூட்டெரு தயாரிக்கப் போதிய ஈரப்பதனும் நுண்ணங்கிகளுக்குத் தேவையான நைதரசனும், காற்றோட்டமும். ஊடகம் அமிலத்தன்மையாகாமலும் இருக்க வேண்டும். அத்துடன், பிரிகையின் போது ஆவியாகும். அமோனியாவைத் தடுக்க சல்லியல்லாத அரிந்த மண்ணையும் சொற்பம் சேர்த்துக் கொள்வது உசிதம்.

எனவே, கழிவுப் பொருட்களுடன், சாணி சிறுநீர் ஊறியமண், வீட்டுச் சாம்பல் முதலானவை இடப்படுகின்றன.

சாணி:

20 பங்கு கழிவுப் பொருளுக்கு ஒரு பங்கு சாணி வீதம் தேவை. (சாணியைக் கரைத்து ஊற்றுதல் நன்று)

சிறுநீர் ஊறிய மண்

மாட்டுத் தொழுவத் தளம் மண் நிலமாக இருந்தால் மேல் 3 – 4 அங்குல மண்ணை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை செருக்கி எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். குப்பையும் மண்ணும் 20:1 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும்.

சாம்பல்;

குவியலில் அமிலத்தாக்கம் அதிகப்படாது தடுக்க சாம்பல் சேர்க்கப்படுசிறது. 100 பங்குக் குப்பைக்கு 1 பங்கு சாம்பல் போதுமானது.

மேற்கூறிய வழி முறைகளில் கூட்டுப் பசளையை மேலே குவியலாகவும், குழிவெட்டியும் தயாரித்துக் கொள்ளலாம். இவை, இந்தூர் முறையில் அடங்குபவை.

தயாரிப்பு முறைத் தெரிவு

நீர் கிடைக்குமாயின் குவியல் முறை

நீர் குறைந்த இடமாயின் குழி முறை

குவியல் முறை

குவியலின் அகலம் 15 - 18 அடியாகவும், உயரம் 2 - 3 அடியாகவும், நீளம் தேவைக்கு ஏற்பவும் அமையலாம்.

ஒரு அந்தத்தில் தொடங்கி கழிவுப் பொருளை 6 - 8 அங்குல உயரத்திற்கு இட்டபின் ஒரு அங்குல உயரதிற்கு சாணியும், சிறுநீர் ஊறிய மண்ணையும் பரவி நன்கு நனையும் வரை நீர் தெளிக்க வேண்டும். இவ்வாறு குவியல் 2 - 3 அடி வரை படைகளை இட வேண்டும்.

பொவாக ஆரம்பத்தில் வெப்பநிலை 110°C வரை கூடும். இதனால், பெரும்பாலான களை விதைகளும், நோய் உண்டாக்கும் கிருமிகளும் அழிந்துபோகும். அத்துடன் நுண்ணுயிர் தொழிற்பாடு கூட்டப்படும். ஆரம்பத்தில் வெப்பநிலையுடன் போதியளவு ஈரலிப்பும் இருக்க வேண்டும். இதனைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் இரும்புக்கம்பி செலுத்தி அதை சற்று நேரத்தில் எடுத்துப் பார்த்தால் கம்பி வெப்பமாகவும் ஈரமாகவும் இருக்கும். இதுவே சரியான நிலை.

புரட்டுதல்

காற்றோட்டத்தைக் கூட்டவும், மேல் கீழாகக் கழிவுகள் புரளவும், புரட்டுதல் மேற்கொள்ளப்படும்.

- 1ம் புரட்டல் குளியலை நிரப்பி இரண்டாம் கிழமையின் பின் செய்ய வேண்டும்.
- 2ம் புரட்டல் முதலாம் புரட்டல் முடிந்து இரண்டாம் கிழமையும்,
- 3ம் புரட்டல் இரண்டாம் புரட்டல் முடிந்து 4ம் கிழமையின் பின்பு மேற்கொள்ள வேண்டும்.

மூன்றாம் புரட்டல் முடிந்து ஒரு மாதத்தின் பின் வயலில் பிரயோகிக்கலாம்.

குழி முறை

இம்முறை நீர் குறைவான இடத்திற்கு சிறந்தது. இங்கு 30 அடி நீளமும், 15 அகலமும் 2 அடி ஆழமும் கொண்டிருக்கும். குழியானது சற்று உட்சரிந்ததாக இருக்க வேண்டும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிற் காடழிப்பும் அதன் பாதிப்பும்

கு. வெற்றிவடிவேல் மன்று

இந்து சமுத்திரத்தின் ஓர் எழில் மிகு தீவென மேல் நாட்டவர்களால் வர்ணனை செய்யப்பட்ட இலங்கையின் முழு நிலப்பரப்புமே ஒரு காலகட்டத்தில் செழிப்பானகாடுகளால் சூழப்பட்டிருந்தது

ஏறக்குறைய 1900 ஆம் ஆண்டளவில் இலங்கையின் முழு நிலப்பரப்பில் 70% இயற்கைக் காடுகளால் மூடப்பட்டிருந்தது. 1940 ல் மலேரியா தடுப்பு இயக்கம், குடியேற்றம், சனத்தொகை அதிகரிப்பு ஆகியவற்றிலும், அபிவிருத்தித் திட்டங்களாலும் உலர் வலயப் பகுதியில் காடழிப்பு வீதம் அதிகரித்துக் கொண்டே சென்றது. 1956ல் வான்படவியல் ஆய்வின்படி இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 44% காடுகளே எஞ்சியுள்ளதாகக் காட்டியது. இக்காடழிப்புக்கு முக்கிய காரணம் உலர் வலயப் பகுதியில் நடைபெற்ற சேனைப் பயிர்ச் செய்கையாகும். சேனைப் பயிர் செய்கையின் பின் கைவிடப்பட்ட நிலப்பரப்பு மீண்டும் காடுகளால் மூடப்படாது வெறுமனே விடப்பட்டன

1981ல் செய்மதி உருவ அமைப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி மொத்த நிலப்பரப்பில் 24.9% அளவு காடுகளினாலேயே மூடப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. அண்மைக் காலங்களில் வன திணைக்களத்தின் படவரையியல் பிரிவினால் இங்கிலாந்து ஏ. டீ. ஏ. நிறுவனத்துடன் 1991 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 20.1 சதவீதமான அல்லது 1.33 மில்லியன் ஹெக்ரேயர் நிலப்பரப்பு மட்டுமே தற்போது எஞ்சியுள்ளதாகக் காட்டியுள்ளது.

ஒரு பிரதேசத்தின் சூழல் சமநிலை மேலும் குழப்பமடையாமல் இருக்க அப்பிரதேசமானது ஆகக் குறைந்தது 25% சதவீதக் காடுகளினால் மூடப்பட்டிருக்க வேண்டும். இது வபர் மட்டம் என அழைக்கப்படும். ஆனால், இலங்கையின் காடானது வபர் மட்டத்திற்கு கீழே சென்றிருப்பது அபாயகரமான சூழலை உருவாக்குவதற்கு சாதகமானதாகும்.

கடந்த ஒரு தசாப்த காலமாக ஏற்பட்ட துரித காடழிப்பிற்கு முக்கிய காரணம் துரித நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தித் திட்டமெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஏறக்குறைய 150,000 ஹெக்ரேயர் காடுகள் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினால் அழிக்கப்பட்டுள்ளது. இயற்கையின் அற்புதமான படைப்புக்களில் அயன மண்டல மழைக்காடுகளும் ஒன்றாகும். இப் பசுமை குன்றாத வனப்பிரதேசம் ஆயிரக்கனக்கான உயிரினங்களின் உறைவிடமாகவும் எழில் மிகுந்த சிற்றருவிகளையும், வானளாவிய விருட்சங்களையும், அரிதான மருத்துவச் செடிகளையும், மூலிகைகளையும் தன்னகத்தே கொண்டதாக அமைந்துள்ளது.

ஆனால், இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் அதிகரித்து வரும் சனத்தொகையின் நிமித்தம், உதாரணமாக, இலங்கையின் சனத்தொகை 1946 இலிருந்து 1981 வரை இரட்டிப்படைந்து காணப்பட்டது. அதாவது, 1946ல் 6,657,000 ஆகவும் 1981ல் 14,850,000 ஆகவும் காணப்பட்டது. இந்த சனத்தொகை அதிகரிப்பானது குடியேற்ற நிலம், விறகு, கட்டடப்பொருட்கள், ஏனைய மர உற்பத்திகள் என்பவற்றின் தேவையையும், மற்றும் பண்ணைகள், வயல் நிலங்கள் ஆகியவற்றை உருவாக்கவும், சேனைப் பயிர்ச் செய்கையையும், தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்டங்களையும் உருவாக்கவும் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவே காடழிப்பு வேலையானது எந்தவிதத் தடையுமின்றி அதிகரித்த வீதத்திலேயே சென்றன.

காடழிப்பு என்பது தனியே மனிதனின் தலையீட்டினால் உருவான ஒன்றுமட்டுமென நாம் கூற முடியாது. ஏனெனில், இயற்கையானது எப்போதும் மனிதனுடன் ஒத்ததாக இருக்கவில்லை. காட்டுத்தீ, வெள்ளப் பெருக்கு, சூறாவளி போன்ற இயற்கை நிகழ்வுகளும் காடழிப்புக்கு ஏதுவாகவும் மனிதனுக்கு அச்சுறுத்தலாகவும் இருந்து வந்துள்ளன. இவ்வாறு காடுகள் அழிக்கப்பட்டதால் நேரடியாகவும் உடனடியாகவும் எதுவித தாக்கத்தையும் அறியாத மனிதன் தொடர்ந்து தனது செயற்பாட்டினை வளத்தின்மீது செலுத்திக்கொண்டே வந்தான்.

காடுகள் தொடர்ந்து அழிக்கப்படுவதனால் இங்கு வாழும் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். இயற்கைச் சூழலும், பருவகால நியதிகளும் குழப்பமடைகின்றன. பூமியின் தட்ப வெப்பநிலை பாதிக்கப்படுகின்றது பருவப்பெயர்ச்சி மழை காலத்தே பெய்யாது காலந்தவறிப் பெய்கின்றது. இக்காடழிப்பினால் பூமியில் நிலஅமைப்பு மண்வளம் ஆகியன பாதிப்பிற்குள்ளாகின்றன. திட்டமிடப்படாத காடழிப்பினாலும், மர அகழ்வினாலும், மண்சரிவு, மண்ணரிப்பு, நீர்தேக்கங்களின் மட்டம் குறைதல் போன்ற பாரிய விளைவுகள் ஏற்படக் காரணமாகின்றன.

தொடர்ச்சி 7ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுச் சுடர்

திரு. ஆர். கதிரமலைநாதன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்

சுற்றாடல் மாசடைதல் என்பது மறுபுரத்தில் வளங்களின் இழப்பே என விபரிக்கப்படுகின்றது. இவ்வாறானால், உண்மையில் வளங்கள் என்பன தான் யாவை? அவற்றின் சிறப்பம்சங்கள் எவை? என்பது பற்றிச் சிறிதளவாவது தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா?

### எச்சரிக்கை

இப்போதுள்ள தொழிற்சாலைகளின் வேலை நாட்கள் அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேலும் குறைக்கப்படுமென்று எதிர்வு கூறப்பட்டுள்ள அதேவேளை இதற்குத் தயாராகுமாறும் தொழில் முயற்சியாளர்கட்கு எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

காரணம் உலக மக்களின் தற்போதைய வளங்களைப் பயன்படுத்தும் போக்கில் மாற்றம் ஏதாவது ஏற்படாதவிடத்து, பல தொழிற்சாலைகள் தமது உற்பத்திகளை வெகுவாக கட்டுப்படுத்த வேண்டியிருக்குமென்று, இதன் உடனடி விளைவாகத் தமது தொழிளாலர்கட்குக் கட்டாய ஓய்வு வழங்க நிர்ப்பந்திக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுமென்றும் மேலும் கூறப்படுகின்றது.

### தலையாயது

வளங்கள் எனச்செல்லும்போது முதலிற்கொள்ளப்படவேண்டியது. மனித வளமேயாம். ஏனெனில், இவ்வளம் சம்மந்தப்படாத எதுவுமே வளமாகக் கொள்ளப்படுவதில்லை.

உதாரணத்திற்கு, ஓடும் தண்ணீர் வளமாக மாறவேண்டுமாயின், மனித சக்தியினால் அது வாய்க்கால்கள் மூலம் வயல்கட்குப் பாய்ச்சப்பட வேண்டும். காட்டு மரங்கள் வளமாக மாற வேண்மாயின் மனித சக்தியினால் அது தள்பாடங்களாகச் செய்யப்பட வேண்டும்.

சுருக்கமாகக் கூறின், மனித வளம் சேர்க்கப்படாத நிலையில் எந்த வளமும் உபயோமற்ற ஒன்றாகவே கருதப்படலாம். ஒரு மூலப் பொருளாகவே கொள்ளலாம். இதனை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்வது முக்கியம்.

### வளங்கள்

சாதாரண மனித வாள்வின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்ததறகுப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களை எல்லாம் வளங்கள் எனச் சொல்ல முடியும்.

இவற்றைப் பொருளாதார ரீதியில் - இலவசமாகக் கிடைப்பவை, இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியவை, சிரமத்தின் அடிப்படையிலேயே தேடிப் பெறத் தக்கவை என்ற பெரும் பிரிவுகளுள் அடக்கிவிட முடியும்.

### இருவகையின

வளங்களை அவற்றின் சிறப்புத் தன்மை நோக்கி இரு பெரும் தன்மையினவாகக் கொள்ள முடியும். இலகுவிற் தம்மைத் தாமே புதுப்பித்துக் கொள்ளக் கூடியவை, சுலபத்திற் தம்மைத்தாமே புதுப்பித்துக் கொள்ள இயலாதன என்பனவே அவை. காற்று, ஒளி, நெருப்பு என்பன முதலாவது வகையின. இரண்டாவது வகையின. உணவுத் தானியங்கள், மரங்கள், எண்ணெய் வளம் என்பனவாகும்.

### வழிமுறைகள்

பொதுவாக வளங்களை அவை பெற்றுக் கொள்ளப்படும். வழி முறைகளைக் கருத்திற் கொண்டு முதற்தன்மையினவாக வகைப்படுத்தலாம்.

முதலாவது வகையின நேரடியாகக் கிடைப்பவை. சூரிய ஒளி, காற்று, தண்ணீர் என்பன இத்தைகையவை. இரண்டாவது வகையின இன்னொன்றிலிருந்து பெறப்படுபவை. உணவுப் பண்டங்கள், நீராவி, பெற்றோல் என்பவை இதனுள் அடங்கும். மூன்றாவது வகையின செயற்கையாக ஆக்கப்பட்டவற்றிலிருந்து கிடைப்பவை. இயந்திர சக்தி, அணுச்சக்தி மெழுவர்த்தி என்பன குறிப்பிடக்கூடியன.

### முக்கியத்துவம்

உடனடியாகப் புதுப்பிக்கும் தன்மையுள்ள இயற்கைவளங்களே உயிரினங்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை: காரணம் நீர், காற்று, ஒளி உணவு என்பன இல்லாது உயிர் வாழ்தல் என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாதது. இவற்றை மட்டும் இறைவன் இலவசமாகவும், இலகுவாகவும் பெறக்கூடியதாகச் செய்திருக்காவிட்டால் உயிரினங்களது வாழ்க்கை எவ்வாறு அமைந்திருக்கும்? ஆனால், ஏனைய இயற்கை வளங்களான பட்டு, எண்ணெய், வைரம் என்பன இல்லாத நிலையிலும் அவனால் உயிர் வாழ்ந்திருக்க முடியும்.

### பிரச்சினை

உண்மையில் இயற்கையிலிருந்து கிடைக்கும் வளங்களின் இருப்புக்களைச் சரியாக அளவிட முடியாதுள்ளமை முக்கிய பிரச்சினையாயிருக்கின்றது. காற்று, ஒளி என்பன இலவசமாகக் கிடைப்பதும் உலகம் முழுவதும் வியாபித்திருப்பதும் இரு பிரதான காரணங்களாகும்.

மேலும், நிலத்துக்கடியிலும், சமுத்திரங்களின் அடியிலும் படிந்திருக்கும் எண்ணெய் வளம் கனிய வளம் என்பவற்றையும் சரியாகக் கணக்கிட முடியாதுள்ளது. எவ்வாறாயினும் இவை நவீன சாதனங்களின் துணையுடன் ஓரளவிற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுப்பசளை...

இங்கும் குவியல் முறை போன்றே மேற் கொள்ளப்படும். குழியை நிரப்பும்போது 5 அடி நீளத்திற்குக் குழியை வெறுமையாக விடவேண்டும். இதனால், புரட்டுதல் செய்முறை இலகுவாக இருக்கும்.

இதற்கான படைகளை இடும் போது இரண்டாம் படையாக ஒரு அங்குலத் தடிப்பிற்கு,

*1 கடகம் பச்சைச் சாணி*

*2 கைப்பிடி மரச்சாம்பல்*

*8 - 10 கலன் நீர்*

*1 கடகம் சிறுநீர் கலந்த மண்*

*1 கடகம் 10 - 15 நாட்கள் பிரிகையடைந்த கூட்டுப்பசளை*

ஆகியன பாவிக்க வேண்டும்.

⚜ மாட்டுச் சாணம் இல்லாதுவிடில் மூன்றில் ஒரு பங்கு உலர்த்திய இலை குழையைச் சேர்க்கலாம்.

இவ்வாறு, மாறி மாறி இட்டு நிலமட்டத்திற்கு மேல் 5 அடி உயரத்திற்கு உயர்த்த வேண்டும். இவ் உயரம் உக்கலாகும் போது குறைவடையும்.

குறிப்பு: இவ்விரு முறைகளும் காற்றுள்ள நிலை நிகழும். இதனால், பிரிகை விரைவாக நடைபெறும். ஆனால், பிரிகையின்போது உருவாக்கப்படும் நைதரசனில் ஒருபகுதி அமோனியாவாக இழக்கப்படும்.

இலங்கையிற் காடழிப்பும்...

முக்கியமாக எம்மைச் சூழ்ந்திருக்கும் காற்று மண்டலத்தின் தூய்மையும், வாயுச் சமனிலையும் பேணுவதற்குக் காடுகளின் தேவை அவசியம். நாம் சுவாசிக்கும்போது ஒட்சிசனை உள்ளெடுத்து காபனீரொட்சைட்டை வெளிவிடுகின்றோம். ஆனால், தாவரங்கள் தமது ஒளித்தொகுப்பு செயற்பாட்டின்போது இதற்கு எதிர்மாறாக காபனீரொட்சைட்டை ஒளித்தொகுப்பிற்குப் பயன்படுத்தி பக்க விளைவாக ஒட்சிசனை வெளியேற்றுகின்றது. இவ்வாறு எமக்கும் ஏனைய பிராணிகளுக்கும் மிகவும் அவசியமான ஒட்சிசனை வாயுச் சமநிலையை வளிமண்டலத்தில் பேணிவரும் தொழிலைக் காடுகள் செய்கின்றன.

இத்தோடல்லாமல் எமக்கு உண்ணும் உணவிலிருந்து எழுதும் காகிதம் வரை எல்லாம் தருபவை மரங்களேயாகும். ஆலைக் கைத்தொழில்கள், மருத்துவத் துறைகள், வளிமண்டலத்தின் தட்ப வெப்ப நிலை, ஈரலிப்பு, நிலநீர், ஒட்சிசன், காபனீரொட்சைட்டு, நைதரசன், கனிப்பொருட்கள் ஆகிய பரிணாம வட்டச் சுழற்சிக்கும் பெரிதும் துணைபுரிபவை காடுகளேயாகும்.

இந்த உலகின் சுற்றாடல் மாசடைவதற்கும், அண்டவெளியின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கும் ஓசோன் மண்டலத்தின் ஓட்டை, பூமியின் வெப்பம் அதிகரிப்பு, துருவப் பகுதி சேதம், கடும் வரட்சி, கடல் மட்டம் அதிகரிப்பு போன்ற பிரச்சினைகள் போல் உலக நாடுகளில் வனப்பிரதேசம் அருகி வருவதும் எதிர்காலத்தில் அபாயத்தை ஏற்படுத்தும் பாரிய பிரச்சினையாகும். எனவே, உலகளாவிய ரீதியில் உருவெடுத்துவரும் இப்பிரச்சினைக்கு இலங்கை மட்டும் விதிவிலக்கல்ல.

## கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே;

### மாசி மாத கேள்விகளுக்கான விடைகள்

1. பட்டாசு வெடிக்கும்போது கந்தகம் கந்தகவீரொட்சைட்டாக மாறுவதால்.
2. நைதரசன்
3. தாவரத்திலிருந்து நீர் ஆவியாகி வெளியேறுதல்.
4. நைதரசன்
5. யேசின்
6. மார்கழி 1ம் திகதி
7. பொசுபேற்று
8. மூடுபயிர் வளர்த்தல், பத்திரக் கலவை இடல்
9. 5%
10. சித்திரை 7 ஆம் திகதி

விலங்குகள் பசித்தால் மட்டும் மற்றைய விலங்குகளைக் கொன்று பசியாற்றும். பசிதீர்ந்த பின்பு விலங்குகள் அருகில் நின்றால்கூட ஏறெடுத்தும் பார்க்காது. ஆனால், மனிதர்கள் தம் பேராசையின் நிமித்தம் அளவிற்கு அதிகமாகவே கொல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

- 25 4-95 அன்று இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளின் கூட்டம் மன்றுவில் நடைபெற்றது.
- 26-4-95 அன்று மாமாங்கம் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தில் சூழல் பாதுகாப்புப் பற்றிய அரைநாள் கருத்தரங்கு நடைபெற்றது.
- 28-4-95 அன்று சித்தாண்டி பொதுஜன அபிவிருத்தி மன்றத்திலும், 3-5-95 அன்று சந்திவெளி தடாகத்திலும், 22-5-95 அன்று மன்றுவிலும் சூழல் மன்றக் கூட்டங்கள் நாடாத்தப்பட்டன.
- 8 5-95 அன்று நடைபெற்ற போரதீவுப்பற்று பிரதேச சபை ஊக்குவிப்புக் குழுக் கூட்டத்தில் எமது உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர்.
- காய்ச்சி ஒட்டுதல், கராஜ் ஆகிய தொழிற்சாலைகள் பற்றிய தரவுகள் எடுக்கப் படுகின்றன.
- கிழக்கிலங்கை தொழில்நுட்பக் கல்லூரி பற்றிய தரவுகள் எடுக்கப்பட்டதுடன், உத்தியோகஸ்தர்களின் அறிவூட்டலுக்கான அவதானங்களும், கருத்துக்களும் அங்கு பெறப்பட்டன. இதற்குதவிய கிழக்கிலங்கை தொழில்நுட்பக் கல்லூரியினருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.
- முறக்கொட்டாஞ்சேனை தொழிலாளர் சங்கத்தின் மூலமாக ஆற்றங்கரையைச் சுற்றி 200 கண்டல் கன்றுகளும், செட்டியார் குடியிருப்பில் ஆற்றங்கரையைச் சுற்றி 350 கண்டல் கன்றுகளும், ஓட்டமாவடி பிரதேச சபை, மீராவோடை விழிப்புக் குழு மூலமாக ஓட்டமாவடி ஆற்றங்கரையோரத்தில் 875 கண்டல் கன்றுகளும் நடப்பட்டன.
- இச்சஞ்சிகைக்குரிய தரமான ஆக்கங்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.
- ஒவ்வொரு மாதப் போட்டிக்கான பணப் பரிசுகள் தபால் மூலம் பரிசு பெற்றவர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

PRINTED MATTER




"மன்று"
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.
இலங்கை.

IN24. MR. K. SANMUGAM
THEACHER
NADUVIL THAMBI VEETHY
VANTHARUMOOLAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org